**பிப்ரவரி - 6**

**"கிழக்கிலும் மேற்கிலும் வனாந்திர திசையிலிருந்தும் ஜெயம் (பதவியேற்றம்) வராது; தேவனே நியாயாதிபதி; ஒருவனைத் தாழ்த்தி ஒருவனை உயர்த்துகிறார்." - சங் 75 : 6, 7**

இலாபகரமாக இருப்பதற்காக, நமக்கு விருப்பங்களும் ஆசைகளும் இருக்கலாம் அவைகள் ஒருபோதும் திருப்தி பண்ணப்படாதவைகள். நாம் நாடுகின்ற உயர்வையும், கனத்தையும் நம்மால் தாங்கக் கூடாது என்று கர்த்தர் காணலாம். எது நமது நன்மைக்கு உகந்தது என்று நம்மைவிட மிகவும் நன்றாய் அவர் அறிகிறார். ஆகையால், தமது பராமரிப்பில் நாம் மனரம்மியமாக இருக்க விரும்புகிறார். நாம் சோம்பேறியாக அல்ல, ஆனால் ஜாக்கிரதையும் உழைப்புமுள்ளவர்களாகவும், கவலையற்றவர்களாகவுமல்ல, ஆனால் விழிப்புள்ளவர்களாகவும், அலட்சியமுள்ளவர்களாக அல்ல, ஆனால் தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றத் தீவிரமான ஊக்கமான நாட்டம் நிறைந்தவர்களாயிருக்க வேண்டும். அதோடு, "நின்று காத்திருக்கிறவர்கள் மாத்திரமே ஊழியமும் செய்கிறார்கள்" என்பதையும் கர்த்தர் தமக்குச் சரியாகத் தெரிந்த நேரத்தில் தனது நோக்கங்களை ஞாபகத்தில் வைத்து கட்டுப்பாட்டில் பொறுமையுள்ளவர்களாயும், அசட்டைப் பண்ணப்படுவதற்கும் மறக்கப்படுவதற்கும் திருப்தியுள்ளவர்களாயிருக்க வேண்டும். **- Z '95, 11 (R 1756)**

தேவனுடைய ஜனங்களின் அனுபவங்களில் தற்செயலாக நேரும் காரியங்கள் இருக்கிறதில்லை. அவர்களுடைய உயர்வுகள் அவர்களுடைய அவமரியாதைகள் ஆகிய இரண்டும், அவர்களுடைய செழிப்பு, அவர்களுடைய இருக்கண்கள் ஆகிய இரண்டும் தெய்வீக நடத்துதலின் கீழ் இருக்கின்றன. தேவனிடத்தில் அன்பு கூறுகிறவர்களுக்கு சகலத்தையும் நன்மைக்கு ஏதுவாக நடத்தி, தவறாத அவருடைய முடிவு நமது வேறுபடும் தேவைகளை அவருடைய மாறும் பராமரிப்புக்குத் தகுதியாக்குகிறது. ஆகையால் அவருடைய கரத்தில் ரம்மியமுடன் இருக்கலாம். **- P '30, 14.**

**ஒத்து வாக்கியங்கள் :-**

யாக் 4:10-12; 1பேது 5:6; லூக் 6:37; 1சாமு 2:7; தானி 2:21; சங் 113:7,8 ; லூக் 1:46-55; மத் 13:10-17; ரோம 9:6-33; 11:1-33; 14:4,13;

**கோபுர வாசிப்பு :** Z '13, 265 (R 5304).

**வினாக்கள் :** இந்த வாரத்தில் தாழ்த்துகிறதும், உயர்த்துகிறதுமான அனுபவங்கள் எவை? அவை எவ்வாறு சந்திக்கப்பட்டன? அதில் மேற்கொண்ட நோக்கங்கள் என்ன? அவை எதில் முடிந்தன?